112789

# திருஆரூர் சமத்கார பூர்வமான ஆடக ஹேத்திரம்

O23:38 2(193)
N55
112789

112789

# திரு ஆரூர்

(சமத்கார புரமென்ற ஆடக க்ஷேத்திரம்)

ராவ்சாகேப். பி. கே. ஷண்முகநாதன் பி.ஏ., பி.எல்.,

## 1. இத்தலத்தின் தத்துவம்.

"உதித்தவர் உதித்திடா ஆரூர்"-என்று சிறப்பித்துக் கூறப்படும் இத்தலம் தஞ்சை ஜில்லாவில், நாகப்பட்டினம் தாலூகாவில் அமைந்துள்ளது. இது ஒரு ரயில்வே ஜங்ஷன். சிதம்பரத்தில் பஞ்சபூதஸ்தலங்கள் என்பவைகள் குறிப்பாகக் கூறப்பட்டன. அவற்றில் திருஆரூர் என்பது ப்ருதிவீ தலம். மேலும் நமது உடலில் அமைந்திருக்கும் ஆறு ஆதாரங்களில் மூலாதாரம் என்ற முதல் ஆதாரமே ப்ருதிவீதத்துவமாதலால் இத்தலத்தை மூலாதார க்ஷேத்திரம் என்றும் கூறப்படும். மூலாதாரமே "பரவாக்" கின் உற்பத்திஸ்தானம் என்பது மந்தர சாஸ்திரங்கள் கூறும் முடிபு. அதாவது நாம் பேசும் "வாக்" அல்லது ஸப்தம், பா, பச்யந்தி, மத்திமை, வைகரீ என்று நான்கு விதமாக இருக்கும். பாவாக் என்பது மூலாதாரத்திலிருந்து கிளம்பி, இருதயஸ்தானத்தை அடையும். அப்போது அதற்கு "பச்யந்தி" என்று பெயர். பின்பு கழுத்து அல்லது "தொண்டை" என்று கூறப்படும் "கண்ட"ப் பிரதேசத்தையடையும் அப்போது அதற்கு 'மத்திமை' என்றுபெயர். அங்கிருந்து வெளிப்பட்டு வாயில் நாக்கு, பல், உதடு இவைகளின் சேர்க்கையால் வெளியே சத்தமாக வருகின்றது. அது தான் "வைகரீவாக்" என்பது. இந்த சூக்ஷ்மத்தை நாமே சில வார்த்தைகளைப் பேசும்போது அந்த சத்தங்கள் எங்கிருந்து வருகின்றன என்பதை உணரலாம். "பரவாக்" என்று சொல்லப்படும் வாக்கின் ஆரம்பம் மூலாதாரம் என்று சொன்னேம். அங்குதான் நமக்கு ஜீவாதாரமான "குண்டலினி" சக்தி இருக்கின்றது. அதன் மூச்சு

அதாவது உச்வாச நிச்வாசமே (Inhalation & Exhalation) "ஸோஹம்" என்ற அஜபாமந்திரம் என்பது மந்திர சாஸ்த்திர ரகசியம். ஆகையாலே திருஆரூர் தலம் "அஜபா நடன க்ஷேத்திரம்" என்று கூறப்படும். இது தலவிசேஷம். இயற்கையிலும் இத்தலத்தின் வடபால் "சுக்கானாறும்" இடபால் "ஓடம்போக்கி"யும் ஓடுவது சுஷும்னா நாடியின் இருபக்கங்களிலும் மேனோக்கிச்செல்லும் இடகலை, பிங்கலைஎன்ற இரண்டுநாடிகள் போன்று அமைந்திருக்கின்றன. ஆகம சாஸ்த்திரப்படி இந்தத் தத்துவங்கள் கூறப்பட்டன.

## 2. இத்தலத்தின் தொன்மை.

அப்பர் அடிகள் தமது தேவாரத்தில் "ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ" என்ற திருப்பதிகத்தில் (6–34) ஊழி காலத்தில் யாவும் சிவத்தில் ஒடுங்கியபின் மறுபடியும் படைப்புத்தொழில் ஆரம்பிக்கத் திருவுளங்கொண்ட அருவசிவம் தன்னிலிருந்து வேறல்லாத சித்சக்தியை வெளிப்படுத்தித் தனது இடது பக்கத்தில் அமர்த்திக்கொண்ட அந்நாளிலேயே திருஆரூரைக் கோயிலாகக் கொண்டருளினான் என்று பாடியுள்ளார். நாகரீக ஆரம்பத்தில் மனிதனுக்கு இறை அறிவு தோன்றி இறைவழிபாடு தொடங்கிய காலத்தில் கல்லாலும், செம்பாலும் உருவம் அமைக்கத் தலைப்படு முன்பு புற்றுக்களையும் மரங்களையும் வணங்கினான் என்பது "பெர்குஸன்" முதலிய ஆராய்ச்சியாளர் கண்ட உண்மை. இப்பவும் தலங்கள் தோறும் தல விருக்ஷம் என்று இருப்பதின் தத்துவம் இதுவே. இத்தலத்தில் புற்றையே மூலட்டானமாக வழிபடுவதால் இத்தலம் தொன்மை வாய்ந்தது என்பது போதரும். சிலப்பதிகாரத்தில் பாண்டியனிடம் வாதம் செய்த கண்ணகி சோழ அரசாட்சியைக் கூறுங்கால் மனுநீதிச்சோழன் கதையைக் குறிப்பிடுகின்றாளாதலின் சிலப்பதிகார காலத்திலேயே இத்தலம் சிறந்து விளங்கியது என்னலாம். கல்வெட்டு ஆராய்ச்சியாளர் இத்தலத்தில் 9-ம் நூற்றாண்டு முதல் 14-ம் நூற்றாண்டு வரை பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் இத்தலத்தில் காணப்படுவதாய் கூறுகின்றனர்.



ஆயினும் 7-ம் நூற்றாண்டிலிருந்த சம்பந்தர், அப்பர் தேவாரங்களில் இக்கோயில் சிறப்பும், விழாச் சிறப்பும் கூறப்படுவதால் 7-ம் நூற்றாண்டுக்கு முன்பே இத்தலம் பெருமை வாய்ந்தது என்னலாம். அப்பர் இத்தலத்தில் அப்பூதி அடிகளுடன் சென்று ஆதிரை விழா தரிசனம் செய்து அதை "முத்துவிதானம்" என்ற பதிகத்தால் சம்பந்தருக்கு வர்ணித்திருக்கிறார்.

சிதம்பரத்துக்கு அடுத்தபடியாக இத்தலமே சம்பந்தர், அப்பர் போன்ற பல அடியார்களால் பாடப்பட்டிருக்கிறது. இது ஸப்தவிடங்கஸ்தானம் என்று கூறப்படும். ஏழு தலங்களில் மிக முக்கியமானது அதாவது இத்தலத்தைத் தலைநகராகக்கொண்ட முசுகுந்த சக்கிரவர்த்தி என்பான் இந்திரனுக்குப் படைத்துணையாகச் சென்று அதற்கு பிரதிப் பிரயோஜனமாக இந்திரன் வைத்துப் பூஜை செய்துகொண்டிருந்தும் அவனுக்குத் திருமாலால் அருளிக்கப்பட்டதுமான "விடங்கன்" என்ற மூர்த்தியைக் கேட்க அவன் கொடுக்க மனமில்லாது அதுபோல் ஒன்றன்பின் ஒன்றாக ஆறு விடங்கமூர்த்திகளைக் கொடுத்தும் அவற்றை அவன் ஆறு தலங்களில் பிரதிட்டை செய்து அவையாவும் தான் கோரிய அசல் மூர்த்தியல்ல என்பதை அறிந்து ஏழாவதாக ஆதிவிடங்க மூர்த்தியாகின்ற இதனையும் பெற்று இத்தலத்தில் பிரதிட்டை செய்தான் என்பது புராண வரலாறு.

இத்தலம் பெரிய புராணத்தோடு நெருங்கிய தொடர்பு உள்ளது. பெரிய புராணத்தின் பாட்டுடைத் தலைவனாக சேக்கிழார் எடுத்துக்கொண்ட சுந்தரர் இத்தலத்தில் இறைவன் அருளால் பரவையை மணந்து இல்வாழ்க்கை நடத்தினது மட்டுமன்றி, விடங்கப் பெருமான் அடியெடுத்துக்கொடுக்க "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று தொடங்கும் திருத்தொண்டத் தொகை பாடினார். இப்பதிகமே நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்ட திருவந்தாதிக்கும், சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணத்துக்கும் முதல் நூலாகும்.

சிலப்பதிகாரத்தில் கூறிக்கப்படும் மனுநீதிகண்ட சோழன் தன்மகன் ஓர் பசுங்கன்றின்மீது தன் தேரை யோட்டிக் கொல்ல அதற்குத் தண்டனையாக தன்மகனைத் தன் தேர்க்காலில் இட்டனன் என்ற வரலாறு ஓர் கல்வெட்டில் எழுதப்பட்டிருப்பதோடு கன்றை இழந்த பசு ஆசாரவாசல் மணியடிப்பதும் கல்தேரின் முன் சக்கரத்தில் அரசகுமாரன் நசுக்கப்படுவதும் சிலா ரூபமாகச் செதுக்கப்பட்டும் இருக்கின்றது. தஞ்சை ஜில்லாவிலேயே மிகப் பெரிய கோயில் இதுதான் என்று கூறலாம். இதன் விசாலமான பிராகாரத்தில் வஸிஷ்டர், கௌதமர், விச்வாமித்திரர் போன்ற முனிபுங்கவர்களாலும், இந்திரன், அக்கினி, வருணன் போன்ற தேவர்களாலும், இராவணன் பலி போன்ற அசுரர்களாலும் அனேக சோழ பல்லவ மன்னர்களாலும் சிறந்த பக்தர்களாலும் பல காலங்களில் பிரதிட்டை செய்யப்பட்ட அநேக லிங்கங்களின் சிறுகோயில்கள் சுமார் நூறுக்குமேல் இருக்கின்றன. பல சோழ மன்னர்கள் 9-ம் நூற்றாண்டு முதல் 14-ம் நூற்றாண்டு வரை அவரவர் காலங்களில் திருப்பணி செய்தும், புதுப்பித்தும், நிலம், பொன் ஆபரணங்கள் முதலியன வழங்கியும் வந்த விவரங்கள் கல்வெட்டுகளில் காணக் கிடைக்கின்றன.

மேலும் ஒரு ரசமான நிகழ்ச்சி இத் தலத்தோடு இயைந்தது. "வீதிவிடங்கன்" என்ற தியாகேசர் கோயிலின் உள் பிராகாரத்தில் பிரணவத்துக்குள் விநாயகர் உருவம் செதுக்கப்பட்ட சிலை இருக்கின்றது. இதுதான் "வாதாபிகணபதி" என்பது. சிறுதொண்ட நாயனார் சேனாதிபதியாய்ச் சென்று இன்று பம்பாய் மாகணத்தில் உள்ள வாதாபி என்ற இடத்தில் கடும் போர்செய்து பகைவர்களைத் தோற்கடித்தார் என்ற வரலாறு சேக்கிழார் புராணத்திலும், சரித்திர ஆசிரியர்களாலும் பேசப்படுகின்றது.

அவ்வாறு வெற்றியோடு திரும்பிய சிறுத்தொண்டர் இக் கணபதி உருவத்தை வாதாபியிலிருந்து கொண்டுவந்து பிரதிட்டை செய்தாராம். போருக்குச் சென்றவிடத்தில் விநாயகர் வழிபாடு இருந்தது. சங்க காலத்தில் தமிழ்நாட்டில் விநாயகர் வழிபாடு இருந்ததில்லை. முதன் முதலில் சிறுதொண்டராலேயே விநாயக



வழிபாடும் உருவமும் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கவேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். சிறுதொண்டர்—சம்பந்தர் அப்பரோடு ஒத்த காலத்தவர் என்று சேக்கிழார் புராணத்தால் அறிகின்றோம். ஆகவே ஏழாம் நூற்றாண்டிலிருந்துதான் தமிழகத்தில் விநாயகர் வழிபாடு ஏற்பட்டது என்று முடிவுக்கு வரவேண்டியிருக்கின்றது. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பு எழுதப்பட்டதாகக் கூறப்படும் சில வடமொழி நூல்களில் விநாயகருக்குக் குறிப்பு இருக்குமானால், அந்நூல்கள் பிற்காலத்தவரால் எழுதப்பட்டு இடைச்சொருகலாக முன்பு வைக்கப்பட்டன என்று தான் முடிவுக்கு வரவேண்டியிருக்கும். தமிழ் நூல்களிலும், சம்பந்தர், அப்பர் தேவாரங்களிலும் விநாயகர் பேசப்படுகின்றார். அதற்கு முன்பு உண்டான தமிழ் நூல்களில் இல்லை. மாணிக்கவசகர் திருவாசகத்தில் விநாயகருக்குக் குறிப்பு இல்லை. அப்படியாயின் "திருவாசகம்" விநாயகர் வழிபாடு தமிழ் நாட்டுக்கு வருவதற்கு முன்னால் பாடப்பட்டது என்று கூறலாமல்லவா? இந்த முடிவு தற்காலத்தில் மாணிக்கவாசகர் காலத்தை சமய குரவர் மூவருக்கும் பிற்பட்ட காலம் என்று கூறும் ஆராய்ச்சி மேதாவிகள் சிந்தித்துப் பார்ப்பார்களாக. திருவாசகத்தில் விநாயகருக்குக் குறிப்பு இருக்குமேயானால் இந்த முடிவு தவறுதல் என்று ஒப்புக்கொள்ளவேண்டியதுதான்.

## 3. இக்கோயிலின் மூர்த்திகளில் சில.

இத்தலத்தில் பல கோயில்கள் உள. அதில் மிகப் பெரியதும் முக்கியம் வாய்ந்ததும் சமயக் குரவர்களாலும், அடியார்களாலும் பாடிப் பரவப்பட்ட கோயில் திருமூலட்டனரையும், வீதிவிடங்கப் பெருமானையும் தன்னிடம் கொண்ட கோயிலேதான். விசாலமான கோயில். நாலுபுறமும் கோபுரங்கள் அமைந்து பெரிய திருமதில்களையுடையது. நான்குபுரம் கோபுர வாயில்கள் இருந்தாலும் தற்காலத்தில் தெற்குக் கோபுரவாயிலே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. மற்ற கோபுர வாயில்கள் பூராவும் திறக்கப்படாமல் திட்டி வாசல்கள் மட்டும் திறக்கப்பட்டு இருக்கின்றன. உத்ஸவ காலங்களிலும் உத்ஸவ மூர்த்திகள் பெரிய கோபுரவாயில்கள் வழி

யாகவராமல் அதற்கென்று கிழக்குப்புரம் தெற்குப் பார்த்து அமைந்திருக்கும் சிறுகோபுர வாயில்வழியாகத்தான் எழுந்தருளச் செய்கின்றார்கள். இவ்வாயிலுக்கு விட்டவாயில் என்று பெயர். இம்மாபெரும் கோயில் தன்னுள் அநேகம் கோயில்களை அடக்கிக் கொண்டிருக்கிறது.

முன்பு சொன்னபிரகாரம் பூராவும் சிவலிங்கங்கள் அடங்கிய சிறு சிறு ஸன்னதிகள் பலஉள. அவற்றில் இத்தலத்தின் சிறப்பாக அமைந்தவை ஐந்து சிவன் கோயில்கள். அவை அசலேசம், ஆடகேசம், ஆனந்தேசம், அருணாசலேசம், விச்வகன்மேசம் என்பன. இவற்றுள் அருணாசலேசம் என்பது ஒரு சிறு கட்டு மலைமேல் அமைந்துள்ளது. அசலேசம் என்பது புராணத் தொடர்பு உடையது. நமிநந்தியடிகள் தண்ணீரால் திருவிளக்கிட்ட இடம். அப்பால் சிறப்பிக்கப் பெற்றது. கழற்சிங்கரின் மனைவியார் இறைவனுக்குச் சாத்தவேண்டிய புஷ்பத்தை மோந்ததாக நினைத்து அவள் மூக்கை செருத்துணையார் அரிந்த இடமும் இதுவே. என்றும் சலிக்காமல் ஆடிக்கொண்டிருக்கும் நடராஜப் பெருமான் இங்கு எழுந்தருளியிருப்பதால் அசலேசம் எனப் பெயர் பெற்றதென்பார். இந்த ஆலயத்தைப்பற்றி ஒரு ஐதீகம் வழங்கி வருகின்றது. அசலேசரின் நிழல் கிழக்குப் பக்கமேயன்றி மற்றைய திசைகளில் விழாது என்றும் அதுவும் ஆறுமாதத்துக்குள் இறப்பவர் நோக்கினால் அந்த நிழலும் தெரியாதுஎன்றும் கூறப்படுகின்றது. திருவாரூர் புராணத்திலும் இது பேசப்படுகின்றது. ஆடகேசத்தில் ஓர் பிலம் இருக்கின்றது. விச்வகன்மேசம் என்பது விச்வகர்மாவினால் கட்டப்பட்டது என்பர். இதன் பெயருக்கேற்ப இதன் சில்ப வேலைப்பாடு மிகச் சிறந்தது. அழகிய கருங்கற்பணி சிற்பமகிமை வாய்ந்தது.

பெரிய கோயிலுக்குள்ளேயே பல கோயில்களைக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல் அவற்றிற்கு வெவ்வேறு பெயர்களும் கூறுப. முன் சொன்ன ஐந்து ஸன்னதிகள் தவிர சித்தீசுரம் என்பது ஒரு தனி ஆலயம். வடக்குப் பிரகாரத்தில் மேற்குப்பார்த்த ஸன்னதி. இதில் தக்ஷிணாமூர்த்தி உருவம் ஒன்று இருக்கின்றது.



**ஐங்கலக் காசு விநாயகர்:—** இவருக்கு அழகிய சோழ விநாயகர் என்றும் மற்றொரு பெயர் உண்டு. அழகிய சோழன் என்பான் ஐங்கலப் பொற்காசு கொண்டு ஆக்கினான். ஆதலால் இதற்கு இப்பெயர்கள். இது பிரம்மோத்ஸவத்தில் வீதிவலம் வரும். மிகப் பளுவான விக்ரகம்.

**வாதாபி கணபதி:—** இவரைப்பற்றி முன்பே கூறப்பட்டது.

**பஞ்சமுக விநாயகர்:—** ஐந்து முகங்கள் நான்கு திசைக்கு நான்கும் மேலே ஒன்றுமாக அமைந்திருக்கின்றன.

**வான்மீக நாதர் அல்லது புற்றிடங்கொண்டார்:—** இவர் ஸன்னதியே திரு மூலட்டானம் என்பது. இவரே இக் கோயிலுக்கு முக்கிய இறைவன். இக்கோயிலின் தத்துவத்தைக் கூறும் போது இப்புற்றிடங் கொண்டாரையும் கூறினோம். பிருதிவிதலம் என்ற முறையில் ஐந்து தன்மாத்திரைகளையும் உடைய காரணத்தால் இறைவன் பஞ்ச தன்மாத்ர ஸ்வரூபமாக இருக்கின்றார் என்பது பொருள். ஆகம விதிப்படி தனியாக லிங்கத்தை வைத்து வழிபட முடியாது. சாஸ்திர ரீதியாய் அமைந்த சிவன் கோயில்கள் எல்லாவற்றிலும் மூலஸ்தான லிங்கத்தை யடுத்து அம்பிகை திருவுருவம் இருக்கும். அது போன்றே இங்கு அர்த்த மண்டபத்தில் அம்பாளின் திருவுருவம் இருக்கின்றது. வெகு அழகான விக்ரஹம் ஐம்பொன்னால் அமைந்தது.

**தியாகேசர்:—** புற்றிடங்கொண்டாரே இத்தலத்தின் முக்கிய மூர்த்தியாயினும் தியாகேசர் ஸன்னதியே மிகச் சிறந்த ஸன்னதியாகக்கருதப்பட்டு வருகின்றது. தங்கத் தகடுகளாலாகிய பீடம், தூண்கள், விமானம் எல்லாம் மிக நுணுக்கமான நகாசு வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. சமீப காலத்தில் புதுப்பிக்கப்பட்டும் இருக்கின்றது இந்த சொர்ண மண்டபம். இதில் சோமாஸ்கந்த மூர்த்தமாய் அம்மையும், அப்பனும் எழுந்தருளியிருக்கின்றனர். இந்த உருவங்களில் சௌந்தர்யம் சொல்லத்தரமல்ல. பார்ப்பவர் உள்ளத்தை தன் வயப்படுத்தி அப்படி ஈர்த்துக் கொள்ளுகின்றது.

இவர்தான் வீதி விடங்கர் என்று பெயர் கொண்டவர். விஷ்ணு, இந்திரன், முசுகுந்தன் முதலியோர் பூஜித்த இடம். அப்பர் தேவாரத்தில் "பையஞ் சுடர் விடுநாகப் பள்ளிகொள்வான் உள்ளத்தான்" என்கின்றார். பாற்கடலில் பைந்நாகப் பள்ளி கொண்ட திருமாலின் மார்பில் ஓர் பேழையில் தியாகேசர் எழுந்தருளியிருப்பது போன்றும் திருமாலின் உச்வாச நிச்வாசத்தால் பைய ஆடிக் கொண்டிருப்பதாயும் கூறப்படும்.

இக்கோயிலின் தத்துவத்தை விளக்கும்போது குண்டலினியின் உச்வாஸ நிச்வாஸமே அஜபா மந்திரம் என்று கூறினது ஞாபகம் இருக்கலாம். குண்டலினியாகிய பாம்பில் பள்ளி கொள்ளும் திருமாலின் உச்வாஸ நிச்வாஸம் அந்த அஜபா மந்திரத்தைக் குறிக்கின்றது. அதனால் தியாகேசர் மேலும் கீழும் அசைந்தாடுவதே அஜபா நடனம் என்று கூறப்படுவது. இவ்வாறு ஒரு பெரிய மந்திர சாஸ்திரம், யோகசாஸ்திரம் இவற்றில் அடங்கிய உண்மையை, ஆகமம் இவ்வாறு உருவாக்கப்படுத்தி திருமாலின் மார்பில் அசைந்தாடுவதாய் ஓவியம் தீட்டுகின்றது. "இதையே அழகிய வர்ண ஓவியமாகத் தீட்டி ஆபரணங்களிலும் கிரீடங்களிலும் கற்கள் பதித்து அதிக வேலைப்பாடுடைய சித்திரம் ஒன்று தியாகேசன் ஸன்னதியின் தெற்குமதில் வெளிப்புறத்தில் இருக்கின்றது. பார்த்து மகிழத்தக்கது. முன்பே கூறியபடி திருமாலால் இந்திரனுக்கு அளிக்கப்பட்டு அவனால் முசுகுந்தனுக்குக் கொடுக்கப்பட்டு முசுகுந்தன் இங்குஸ்தாபித்தான்என்பது சரித்திரம். இந்த தியாகேசர்தான் அடியாராலும், பலராலும் போற்றப்படும் மூர்த்தி. சோமாசிமாறனார் யாகத்தில் பறையனாக எழுந்தருளியவர் இவரேதான். அம்பிகையின் தலையில் கள்குடம் தாங்கி, நான்கு வேதங்களும் நான்கு நாய்களாக முருகனும், கணபதியும் வேட்டுவப் பையன்களாக காட்சியளித்தார் இந்த வரலாற்றை வர்ண ஓவியமாக நீலோத்பலாம்பாள் ஸன்னதியில் தீட்டியுள்ளார்கள். நமிநந்தியடிகளுக்குக் கனவில் தோன்றி திருவாரூர் பிறந்தாரெல்லாம் சிவகணங்கள் என்று காட்டியவரும் இவரே. இவ்வாறே விரண்மீண்ட நாயனார், கழர்சிங்கர், சுந்தரமூர்த்தி முதலிய பல அடியார்களுக்கு அருள் வழங்கிய கருணைமூர்த்தி, இவரது



பரிவட்டத்தில் "தியாகர்" என்ற பெயர் பொறிக்கப்பட்டிருக்கும். இவருக்கு செவ்வந்தித்தோடும், செங்கழுநீர் மாலையும் சாத்துவது மரபு.

**விடங்கர்.** இது ஒரு சிறிய ஸ்படிகலிங்கம். பொற்கவசம் சாற்றப்பட்டு, தங்கப்பேழையில் எழுந்தருளப்பண்ணி, தியாகேசர் கர்ப்பகிரகத்தின் வலதுபுறமூலையில் இருக்கின்றது. இத்தலப் பெருமை இவருக்கே உரியது. சிறந்த முறையில் மந்திர உரு வேற்றப்பட்ட அதிக சக்தி வாய்ந்த லிங்கம். பூஜை காலங்களில் அபிஷேகம் செய்யப்படுவார். இவர் பக்கத்திலேயே "சீபாதம்" என்ற பள்ளியறை விக்கிரஹமும் இருக்கின்றது.

**நீலோத்பலாம்பிகை.** ஆலயத்தின் தனித்த அம்மன்கோயில். இவ்வுருவத்தின் வசீகரம் அடியார்மனத்தைக் கொள்ளைகொள்ளும் இயல்புடையது. சௌந்தரியமே உருவடுத்தால்போல நின்ற திருக்கோலமாகக் காட்சியளிக்கின்றாள். அம்மையின் இடதுபுறத்தில் ஓர் தோழி முருகனைத் தன்தோளில் வைத்த வண்ணம் நிற்கின்றாள். நீலோத்பலாம்பாள் தனது இடது கரத்தால் முருகனுடைய சுட்டுவிரலைப் பற்றியிருக்கின்றாள். இந்த முகூர்த்தம் இத்தலத்துக்குத் தனிச் சிறப்பாய் அமைந்தது. மூலஸ்தானத்துக்கு முன் அர்த்தமண்டபத்தில் உத்ஸவ விக்ரஹம் இருக்கிறது. முன்மண்டபத்தின் உட்புறத்தில் பல அழகான வர்ண ஓவியங்கள் உள. அவற்றில் சோமாசிமாற நாயனார் யாகத்துக்குப் பறையனாய் எழுந்தருளிய திருக்கோலமும், மாணிக்க நாச்சியார் சரித்திரமும், சரபோஜி மஹாராஜா உருவமும், லக்ஷ்மி, மூலாதார விநாயகர், சுந்தரமூர்த்தி நாயனார் முதலியவர்களின் உருவங்களும் மிக அழகான வர்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருக்கின்றன.

**கமலாம்பிகை.** சக்தி பீடங்களில் இதுவும் ஒன்று. தவத் திருக்கோலமாய் திருவடிகள் ஒன்றின்மேலொன்று ஏற்றி மடக்கித் தொங்கவிட்டு வீற்றிருக்கின்றாள். ஈசான்ய மூலையைப் பார்த்து அமர்ந்திருக்கிறாள். இவளை காமகோட்ட முடைய நாய்ச்சியார் என்றும் கூறுப. பாசம், அக்ஷ மாலை, அபயம், புஷ்பபாணம் தாங்கிய நான்கு திருக்கரங்கள் உள.

**கமலாம்பிகை:—** திருவாரூருக்கு கமலாலயம் என்ற பெயரும் உண்டு. கமலம் என்பது தாமரை மலரைக்குறிக்கும். யோக சாஸ்திரத்தில் நமது உடம்பில் 6 ஆதார கமலங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அவ்வாறு ஆதார கமலங்களில் மிகவும் முக்கியத்வம் வாய்ந்தது மூன்று. அவை மூலாதாரம், அநாகதம் என்ற ஹ்ருதயஸ்தானம், ஸஹஸ்ராரம் என்ற சிரசின் உச்சி. ஸஹஸ்ராரம் என்பது 1000 இதழ் தாமரை என்று யோகசாஸ்திரங்கள் கூறுகின்றது. இங்கு சக்தியும் சிவமும் அபின்னமாய், அர்த்த நாரியாய் இருப்பதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. சக்தி என்பது துரீய நிஷ்கள சிவத்தின் அபின்னஸ்வரூபம். சக்தியில்லையேல் சிவம் வேலை செய்யாது. இவ்வாறு அபின்னமாய் இருக்கும் சக்தியைத் தான் தந்திர சாஸ்திரங்களும் சாக்த கமங்களும் "காமகலை" என்ற பரிபாஷையில் அழைக்கின்றன. இதில் "காம:" என்பது சிவத்தையும், "கலா" என்பது சக்தியையும் குறிக்கும். இந்த காமகலை தான் சகல பிரபஞ்சத்துக்கும் காரணமானது. இத்தகைய காமகலையே கமலாலய சக்திபீடமாகும் திருவாரூர் பிரபஞ்ச சிருஷ்டியின் பொருட்டு சிவத்தின் சித் சக்தி ஆலோசனை செய்கிறாள். இந்த ஆலோசனையே "தபஸ்" என்ற பெயரால் குறிப்பிடுகின்றது. ஆதலே கமலாலயத்தில் அமர்ந்துள்ள கமலாம்பிகை "பிறங்கு முயிர்த்தொகையனைத்துங் களிகூரத்தவம் புரியும் பீடுசான்ற சிறந்த கமலாலய நாயகி" என்று நூல்கள் கூறுகின்றன. கமலாம்பிகை எவ்வாறு காமகலையாகும் என்பதை கொஞ்சம் விவரிக்கலாம். இந்த நுட்பம் ஆகமசாஸ்திரம், தந்திரசாஸ்திரம் போன்ற சாக்த சித்தாந்த நூல்களைக் கற்றுணர்ந்தோரே அறிய முடியும். ஆயினும் சிறிது கூறுவோம். "ஸ்ரீஸூக்தம்" என்பது சுருதியின் ஓர்பகுதி. அதில் "தாம் பத்[3]மினீம் ஈம் சரணமஹம் ப்ரபத்[3]யே" என்ற மந்திரம் வருகின்றது. ஈம் என்னும் பீஜாக்ஷரம் மிக ரகஸியமானது. அது சக்தியின் ப்ராதான்யமான மந்திரம். அதை ஸ்ரீ ஸூக்தம் "பத்மினீம் ஈம்" என்பதனால் பத்மினியாகும் ஈம் என்ற பொருளில் கமலாம்பிகை (பத்மினீ) யே "ஈம்" என்று ஆகின்றது. "ஈம்" என்ற பீஜாக்ஷரம் காமகலையைக் குறிக்கின்றது. அதனாலேயே கமலாம்பிகையே காமகலை என்று சொன்னோம். மந்திர சாஸ்திரம் அறிந்தவர்கள் அறிவார்கள். இந்த காமகலையிலிருந்துதான் சப்தம்



உண்டாயிற்று. அதிலிருந்து அகாராதி க்ஷகாராந்தமான ஐம்பத்தொரு அக்ஷரங்களும், அவற்றிலிருந்து ஸப்தகோடி மஹாமந்திரங்களும் உண்டாயின. இந்த காமகலையாகிற கமலாம்பிகையே பஞ்சதசாக்ஷரீ ரூபமான ஸ்ரீவித்யையும், அவ்வித்யையால் பிரதிபாதிக்கப்படும் ஸ்ரீலலிதா மஹாதிருபுரஸுந்தரியும் ஆவாள். இந்த ரகசியங்களே திருவாரூர் ஆலயத்தில் அமைந்துள்ள "மந்திர பீடம்," "அக்ஷரபீடம்" என்பவை குறிக்கின்றன.

கோயிலின் வெளிப்புறத்தில் ஜ்யேஷ்டாதேவி உருவம் ஒன்றும் இருக்கின்றது.

**துர்க்கை.** எட்டுக்கைகளோடு காலின்கீழ் மஹிஷனியின் தலைமீது நிற்கின்றாள்.

**உத்ஸவமூர்த்தி.** இவருக்கு தருணேந்துசேகரர் என்று பெயர். திருவிழாவில் இவருக்குக்காப்புக்கட்டுவார்கள். திருவிழா முடியும்வரை தியாகேசருக்குள்ள மரியாதைகள்யாவும் இவருக்கும் நடைபெறும்.

**யமசண்டேசுரர்.** இத்தலத்துக்குத் தனிப்பட்ட முகூர்த்தம் ஜடை தாடியுடன் முழங்காலில் முகம்வைத்து கவலையோடு வீற்றிருக்கின்றார். திருவாரூர் பிறந்தார் யாவரும் சிவகணங்கள் என்று அறிந்த யமன் திருவாரூரில் தமக்கு வேலையில்லையே என்று கவலையுற்றதாயும் அவனுக்கு பரமன் சண்டேசுவர பதத்தைவழங்கியதாயும் புராணம் கூறுகின்றது.

**மந்திரபீடம், அக்ஷரபீடம்** இத்தலத்தின் தனிச்சிறப்புகளில் இந்த இரண்டு பீடங்களும் இடம்பெறுகின்றன. மந்திர பீடம் என்பது திருமூலட்டானர் ஸன்னதியின் பின்புறமும், அக்ஷரபீடம் கமலாம்பிகை ஸன்னதியின் பின்புறமும் அமைந்திருக்கின்றன. மந்திரபூர்வமான மஹிமைவாய்ந்த இடங்கள். அடியார்கள் இங்கு அமர்ந்து தியானம் செய்வது மரபு. அக்ஷரபீடத்தில் வடமொழி அக்ஷரங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் தத்துவம் என்னவெனில் ஆகம விதிப்படி அமைந்த கோயில்களில் இறைவனுக்கு நான்கு முகூர்த்தங்கள் உண்டு. அவை உருவம், அருவுரு

112789
O.2.3 : 38.21193
N55

வம், அருவம், சூக்ஷ்மம் என்பன உருவ வழிபாட்டினின்று படிப்படியாய்மேலேறி சாக்ஷாத்காரம் அடையவேண்டிய கருத்தை இவை அறிவிக்கின்றன. இத்தலத்தில் தியாகேசர் உருவத் திருமேனியாயும், புற்றிடம் கொண்டார் அருவுருத்திருமேனியாயும், மந்திரபீடம் அருவத்திருமேனியாயும் அமைந்திருப்பது சிந்திக்கத்தக்கது. முன்பு சொன்ன அஜபாநடனம் போன்று இதுவும் இத்தலத்தின் பரம ரகசியமாகும். விரிக்கிற்பெருகும்.

**சுந்தரமூர்த்தி நாயனார்.** சேரமான்பெருமான் நாயனார், பதஞ்சலி, வியாக்ரபாதர். முதலிய திருவுருவங்களும் உள்ளன. இவ்வாலயத்திலிருக்கும் எல்லா உருவங்களையும் விவரிக்க இயலாது. லக்ஷ்மி விக்ரஹம் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன.

## 4. தீர்த்தங்கள்.

1. **கமலாலயம்** சுமார் 5 வேலி பரப்புள்ள பெரியதிருக்குளம். கோயிலின் மேற்கு கோபுரவாயிலுக்கு எதிரே இருக்கின்றது. தண்டியடிகள் வெட்டித் திருத்தினார் என்று பெரிய புராணம் கூறுகின்றது. புற்றிடங்கொண்டார் தோன்றிய காலத்தே பாதாள கங்கை சுரந்து இக்குளமாயிற்று என்று புராணம் கூறுகின்றது. 64 கட்டங்களையுடையது. ஒவ்வொரு கட்டத்திலும் ஸ்நானம் செய்பவருக்கு ஏற்படும் இகபர நன்மைகளை விளக்கி ஆங்காங்கு கற்சாசனங்கள் நட்டிருக்கின்றார்கள். ஒரு கட்டத்தில் ஸ்நானம் செய்தால் பல்வலிதீரும் என்றுகூடச் சொல்லப்பட்டிருக்கின்றது. உத்ஸவகாலங்களில் தீர்த்தவிழா இங்கு நடைபெறும். மைய்ய மண்டபம் இருக்கின்றது. சிறியகோயிலும் கோபுரமும் இருக்கின்றன. இங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்தி நடுவணநாதர் எனப்படுவர். ஓடத்தில் சென்று வழிபடுவது வழக்கம். பிரதோஷ தரிசனம் மிக விசேஷமாகக்கருதப்படுகின்றது.

2. **சங்கதீர்த்தம்.** கோயிலில் ஆயிரக்கால் மண்டபத்துக்குப் பக்கத்தில் இருக்கின்றது. இது மிகப் புனிதமான தீர்த்தமாகக் கருதப்படுகின்றது. இதில் நீராடுபவர்களுக்கு சருமநோய்கள் தீருகின்றனவாம்.



3. **ஸரஸ்வதி தீர்த்தம்.** கோயில் பிரகாரத்தில் சபாபதி மண்டபத்துக்கு முன்பு உள்ளது. இதில் நீராடுவதால் வாக்கு வன்மை உண்டாகும் என்று கூறப்படுகின்றது. முன்பு தக்ஷன் என்பான் நீராடி ஊமைத்தன்மை நீங்கப்பெற்றான் என்பது புராணம். இவை தவிர இத்தலத்தில் வேறுபல தீர்த்தங்களும் உள. சூரிய தீர்த்தம், செங்கழுநீர்ஓடை, ஓடம்போக்கியாறு, ஞானபிரகாசக் குளம், கயாதீர்த்தம், சூரிய குண்டம், சோம குண்டம், அக்கினி குண்டம், ருத்ர தீர்த்தம் முதலியனவும் உள. மொத்தம் இருபத்தி ஒன்று தீர்த்தங்கள் இத்தலத்தில் இருப்பதாக தலபுராணம் கூறுகின்றது.

**மண்டபங்கள்.** இக்கோயிலில் மண்டபங்கள் பல உள. அவற்றில் முக்கியமான சிலவற்றை இங்கு குறிக்கின்றோம்.

1. **தேவாசிரயமண்டபம்.** இதுதான் ஆயிரக்கால் மண்டபம் என்பது. இம் மண்டபம் பெரிய புராணத்தில் பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றது. எப்பொழுதும் இங்கு தேவர்கள் வந்து ஆசிரயிப்பதால் இப்பெயர் பெற்றது. அடியார்கள் பலர் இங்கு குழுமியிருந்து பரமனைப்பாடி மகிழ்வார் என்று சேக்கிழார் கூறுகின்றார். ஆழித்தேர் ஊர்ந்தபின் தியாகேசர் இங்கு எழுந்தருளி அபிஷேகம் பெறுவர்.

2. **சபாபதி மண்டபம்.** இது மேலக் கோபுரவாசலை அடுத்து இருக்கின்றது. இதற்கு சித்திரசபை என்ற பெயரும் உண்டு. இங்கு தேவஸ்தான காரியாலயமும், புத்தகசாலையும் இப்போது இருக்கின்றன.

3. **புராண மண்டபம்.** சபாபதி மண்டபத்துக்குப் பக்கத்தில் இருக்கின்றது. இங்கு நாள்தோறும் கமலாலய மஹாத்மியம் வாசிக்கப்பட்டு வந்தது.

4. துலாபார மண்டபம். மூன்றும் பிரகாரத்தில் தென் மேற்கு மூலையில் இருக்கின்றது. பண்டைத் தமிழ் அரசர்கள் தங்கள் பிறந்த நாளில் தம்மையே தராசில் நிறுத்து ஈடுகட்டிய பொன்னை திருக்கோயில் திருப்பணிக்காகச் செலவிட்டு வந்தனராம்.

5. பந்தக்காட்சி மண்டபம். தெற்குக் கோபுரத்துக்கு அடுத்து இருக்கின்றது. பங்குனி உத்திரவிழாவின் இறுதியில் தியாகேசர் நடனக்காட்சி அருளும் மண்டபம். இது பக்த காட்சி மண்டபம் என்று பெயர்பெற்று நாளடைவில் பந்தக்காட்சி என்று பெயர் மாறியிருக்கிறது.

6. ஊஞ்சல் மண்டபம். இது பக்தகாட்சி மண்டபத்திற்கு எதிரில் உள்ளது. திருவாதிரையன்று உத்ஸவர் எழுந்தருளி ஊஞ்சல் உத்ஸவம் கொண்டாடும் இடம்.

7. எண்ணைக்காப்பு மண்டபம். பங்குனி உத்திர விழாவில் தியாகேசர் எழுந்தருளி எண்ணைக்காப்பு சாற்றியருளப்பெறுவார். திருவாதிரையில் அபிஷேகம் இங்குதான் நடைபெறும். இது ஒரு பெரிய மண்டபம். இதைக் கட்டுவித்தது ராஜநாராயணசோழன் என்பான்.

8. திருப்பள்ளித்தாம மண்டபம். பெரிய புராணத்தில் கழற்சிங்கநாயனார் புராணத்திலும் செருத்துணைநாயனார் புராணத்திலும் இம்மண்டபம் குறிக்கப்படுகின்றது.

இவைதவிர வேறு மண்டபங்களும் உள்ளன. மஹா மண்டபம், அர்த்த மண்டபம், அந்தராள மண்டபம், திருக்காற்று மண்டபம், தட்டஞ்சுற்றி மண்டபம் முதலியன மிகச்சிறிய முறையில் அமைந்து விளங்குகின்றன.

## இத்தலத்தின் வேறுகோயில்கள்.

1. பரவையுள்மண்டளி: (பரவை=கடல்: தளி=கோயில் மண்+தளி=மண்டளி=மண்ணாலாகிய கோயில். (தண்ணீருக்குள்



இருந்தமையால் இப்பெயர் பெற்றது) இதுவும் பெரிய புராணத்தில் குறிக்கப்படுகின்றது. இது கீழவீதியில் தேர் நிலைக்குச் சமீபமாய் உள்ளது. இங்கு துர்வாசர் வழிபட்டதாகக்கூறுவர். இதனால்தான் இறைவனுக்கு துர்வாச நாயனார் என்றபெயர் அமைந்ததுபோலும். சுந்தரர் இவரை "தூவாயர்" என்று அழைக்கின்றார். தூவாயர் என்ற தமிழ்ப் பெயரே புராணத்தில் தூர்வாச நாயனார் எனத் திரிந்தது என்று நினைக்கவும் இடமுண்டு.

2. பிரும்மன்கோயில். இத்தலத்தின் தனிப்பட்ட பல சிறப்புகளில் இதுவும் ஒன்று. பிரும்மாவுக்கு ஆலயம் இருப்பது வழக்கமில்லை. ஆயினும் இத்தலத்தில் நான்கு முகங்களோடு எழுத்தாணியும் கமண்டலமும் கொண்ட திருக்கரங்களுடன் சிருஷ்டிக்கடவுள் காட்சியளிக்கின்றார். இது சூரிய தீர்த்தக்கரையில் இருக்கின்றது. இக்கோயிலில் சூரியன் திருவுருவமும் இருக்கின்றது.

3. தண்டபாணிக் கோயில். இதுவும் தேரடியில் இருக்கின்றது. ஒரு செய்குன்றத்தில் மேற்குப் பார்த்த ஸன்னதியாக அமைந்துள்ளது.

4. மாற்றுரைத்த விநாயகர்கோயில். கமலாலயக் குளத்தின் கீழ்கரையில் உள்ளது. சுந்தரர்தான் பரமனிடம் பெற்ற பொன்னை மணிமுக்தா நதியிலிட்டு கமலாலயத்தில் எடுத்தபோது அதன்மாற்று குறைவாக இருந்ததாயும், இவ்விநாயகப் பெருமான் திருவருளால் மாற்றுக் குறைவு நீக்கப்பட்டதாயும் கூறப்படுகின்றது.

5. குளுந்தாலம்மன் கோயில். மூலத்தானத்தில் அம்பாளின் தலைமட்டும்தான் அமைந்திருக்கின்றது. பரசுராமனால் வெட்டப்பட்ட ரேணுகாதேவியின் சிரம் என்பது ஐதிகம். இக்கோயிலில் வழிபடுவோர் பட்டுக்கோட்டை, அரந்தாங்கி முதலிய இடங்களிலுள்ள செட்டிமார்கள்.

6. மாணிக்கநாய்ச்சியார் கோயில். மாணிக்க நாய்ச்சியார் என்பவர் ஓர் "ருத்ரகணிகை" என்று கூறப்படும் பரத்தையர் குலத்தில் உதித்தவள். மிகுந்த சிவபக்தியுள்ளவள். இவளுடைய

உறுதிப்பாட்டைச் சோதிக்க பரமனே ஒரு கிழவேதியனாக எழுந்தருளி இவளுடன் கலந்திருந்து தனது மாயையால் இறந்தவர் போலாக இவ்வம்மையார் அவரே பதியென்று தம் உறுதிப்பாட்டால் அவரோடு உடன்கட்டை யேறத்துணிய பெருமான் இடபாரூடராய் காட்சி வழங்கினன். இன்னும் திருத்தேர் புறப்படு முன் "மாணிக்க நாய்ச்சியார்" அர்ச்சனையென்று அவள் மரபினரால் வழிபாடு நடைபெற்றபின்பே தேர் வடம் பிடிப்பார்கள். இது ஒரு சிறந்த திருக்கோயில்.

7. இவை தவிர விஜயபுரம் மாரியம்மன் கோயில், பெருமாள் கோயில், பிடாரியார் கோயில் என்று பல கோயில்கள் உள.

இத்தலத்தோடு தொடர்புடைய அடியார்களும் பிறரும் தேவாரம், திருவாசகம் பாடிய சமயக்குறவர்கள் நால்வரும் இத்தலத்தைத் தரிசித்துப்படியிருக்கின்றனர். அதில் அப்பூதி அடிகளோடு திருநாவுக்கரசர் திருவாதிரை விழாக்கண்டு களித்து அந்தச் சிறப்பை சம்பந்தருக்கு "முத்துவிதானம்" என்ற பதிகத்தால் விதந்தோதக்கேட்ட சம்பந்தரும் உடனே புறப்பட்டுச்சென்று வழிபட்டார் என்று சேக்கிழார் கூறுகின்றார். சுந்தரர் சரிதத்தோடு மிகத் தொடர்புடையது என்பதைச் சைவ உலகம் நன்கு அறியும். சுந்தரரைக் காணவந்த சேரமான்பெருமான் நாயனார் திருமூலட்டான நாதரைச் சந்தித்து "திருவாரூர் மும்மணிக் கோவை" பாடியுள்ளார். இவர்கள் தவிர பெரிய புராணத்தில் குறிக்கப்படும் அடியார்களில் ஏயர்கோன்கலிக்காமர், கழற்சிங்கர், விறன்மீண்டார் செருத்துணை நாயனார், தண்டியடிகள், அப்பூதியடிகள், நமிநந்தியடிகள், சோமாசிமாற நாயனார், பரவைநாச்சியார் போன்ற தொண்டர்களும் வழிபட்ட தலம். இப்பால் சைவநெறிசார்புடைய செட்டித்தெரு ஞானபிரகாசர், கமலை ஞானப்பிரகாசர், சிதம்பரம் மறைஞான சம்பந்தர், குருஞானசம்பந்தர், திருவாரூர் புராணம் பாடிய சம்பந்த முனிவர் போன்ற அருட் தொண்டர்களும் பலர் உளர். இன்னும் குமரகுருபரர், அருணகிரியார், கச்சியப்ப சிவாச்சாரியார் போன்ற அருட்கவிகளும் திருவாரூர் சேர்ந்து தரிசித்துள்ளனர். ராம நாடகம் பாடிய அருணாசலக் கவிராயர், தியாகராஜ



மசட்டியார், எல்லப்ப நாவலர், வித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை போன்ற பல பெரும் புலவர்களும் இத்தலத்தில் வந்து வழிபட்டிருக்கின்றனர். சிதம்பரத் தலத்திற்கு அடுத்தப்படியாக எண்ணிலடங்கா அடியார்களால் வியந்தோதப்பட்ட தலம் இதுவே.

**நூல்கள்.** சிதம்பரம் போலவே இத்தலத்துக்கும் அனேக வடமொழி, தமிழ்மொழி நூல்கள் உள்ளன. விரிக்கிற் பெருகும்.

தமிழ்நாட்டில் தொன்மை வாய்ந்த பதிகளில் இதுவும் ஒன்று ஒரு பழைய பாடல் இதன் சிறப்பைக் கூறுகின்றது.

**"ஆரூரன் சன்னதிபோல் அரூரனாலயம்போல்**
**ஆரூரன் பாதத்தழகுபோல் — ஆரூர்**
**மருவெடுத்த கஞ்சமலர் வாவிபோல் நெஞ்சே**
**ஒருவிட்டத்திலுண்டோ உரை".**

குறிப்பு:- இக்குறிப்பை அதிக வருத்தத்துடன் எழுதுகின்றோம். இத்துணை சிறப்பு வாய்ந்த தலம் இன்று இருக்கும் நிலைமை சமய உணர்ச்சி உள்ள எவருக்கும் அதிகமான மனக்கவலையைக் கொடுக்கின்றது. சில ஆண்டுகளாகத் தேர் ஓட்டம் நின்றுவிட்டது. சென்ற பங்குனி உற்சவம் ஏதோ ஒரு சிறிய அளவில் நடந்ததாம். கோயிலுக்கு ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. ஆனால் கோயிலில் இடிந்துபோன இடங்களும், மரம் செடி கொடி முளைத்த இடங்களும், சிலஸ்தமான உருவங்களும் புதுப்பிக்கப்படாமல் இருக்கின்றன. இத்தலத்தின் மற்ற கோயில்களின் கதி சொல்லத் தரமல்ல. மாணிக்கநாச்சியார் கோயில் பூராவும் அழிந்துவிட்டதென்றே கூறலாம். அம்மன் விக்ரஹம் கீழே விழுந்து கிடக்கின்றது. இவ்வாலயத்தில் எப்படியோ ஒரு அழகான 'புத்தர் விக்ரஹம் இருக்கிறது. அதைத்தான் திருநீலகண்டர் என்று சிலர் கூறுகின்றனர். நான் பார்த்த அளவில் அது புத்த விக்ரஹமேதான்.

மனுநீதிச் சோழனை நினைவுறுத்தும் கல்தேர் இருந்த இடத்தில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கின்றது. கல்தேரையே மூன்று புறங்களில் மதில்கட்டி முன்புறம் கதவுவைத்து ஆபீஸ் அறையாக

உபயோகப்படுத்துகிறார்கள். சிற்பக்கலைப் பைத்தியம் உள்ளவர் உள்ளம் வருந்தும். அத்தேரின் சிற்பவேலை மிகத்திறன்பட அமைந்திருக்கின்றது. கோயிலுக்குச் சேர்ந்த சில மண்டபங்கள் பல குடும்பங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டு இருக்கின்றன. ஹிந்து மத பரிபாலன போர்டார் இதையெல்லாம் கவனித்ததாகவே தெரியவில்லை. பரவையுள் மண்டலி கோயிலில் பூஜை முதலியன நடந்தாலும் இன்னும் திருப்பணி செய்யவேண்டிய முறையில் பல இடங்கள் சிதைந்து காணப்படுகின்றன. தேர்களில் ஒன்று இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிட்டது. மீதம் இருப்பனவும் நாளுக்குநாள் நொறுங்கிக்கொண்டே வருகின்றன. அவை ஒன்றும் ஓட்டக் கூடிய நிலையில் இல்லை. பிரகாரக் கோயில்களின் உட்புறச் சுவர்களில் கயவர்கள் பல ஆபாச வாசகங்களையும் எழுதியுள்ளார்கள். அதனை அழிக்க அதிகாரிகளும் முயற்சி செய்யவில்லை. நமது தமிழ் கலாசாரம் சீர்கேடடைந்து வருவதற்கு அறிகுறியாக இத்தலம் காணப்படுகின்றது. பொதுமக்களும் அற ஸ்தாபன அதிகாரிகளும் விழித்துக்கொள்ளவேண்டும்.

பி. கே. எஸ்.

* * *

# ஸங்கீத மும்மூர்த்திகள்.

"கமலையில் பிறந்தாற்கும் முக்தி" என்று கொண்டாடப்படும். திருவாரூர் தேவாரகாலம் முதல் பக்திக்கும் ஸங்கீதத்திற்கும் தலைசிறந்த உறைவிடமாக விளங்கிவந்திருக்கிறது. அஜபாநடனம் என்ற யோக நடனத்தை இடைவிடாது நடத்திக் கொண்டிருக்கும் தியாகேசன் அருளால் திருவாரூரில் நாட்டியமும் ஸங்கீதமும் எப்பொழுதும் ஓங்கியிருந்தன, கர்நாடக ஸங்கீதம் புத்துயிர் அடைந்ததற்குக் காரணமான மஹாத்மாக்கள், ஸங்கீத மும்மூர்த்திகள்என்று பிரஸித்தி பெற்ற ஸ்ரீதியாகராஜர், ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் என்ற இம்மூன்று ரத்தினங்களும் தோன்றிய சிறப்பு இத்திருவாரூரையே சார்ந்ததாகும். எனவே, ஸங்கீத அபிமானிகள், ஸங்கீதவித்வான்கள் அனைவருக்கும் பூஜைக்குரிய புண்ணிய பூமியாகும் திருவாரூர் என்ற க்ஷேத்திரம்.



திருவாரூரில் பிறந்து திருவையாற்றிற்கும், த
தியாகய்யர் அவர்களும், சாஸ்திரிகள் அவர்களும் போய்வி
தீக்ஷிதர் அவர்கள் தம் வாழ்க்கையில் பெரும்பாகம் திருவாரூ
கழித்து அங்குள்ள தியாகேசர், கமலாம்பாள் முதலிய
தெய்வங்களுக்கும், மற்றும் திருவாரூரிலுள்ள ஒவ்வொரு
திற்கும் பாட்டுகள் பாடி அவ்வூரிலேயே சிஷ்ய பரம்பரை
ஏற்படுத்தி தீக்ஷிதரையும், திருவாரூரையும் பிரிக்க மு
வகையில் இணைத்துச்சிறப்பித்தார். நாகஸ்வர, பரதநாட்டி
தைகளுக்கு திருவாரூரும் தியாகேசர் ஆலயமும் புகழ்பெ
தது எல்லோரும் அறிந்ததே.

கர்நாடக சங்கீதத்தின் சிகரம் என்று சொல்லக்கூடிய அம்சம் பல்லவி, அனுபல்லவி, சரணம்—இவற்றோடுகூடிய கீர்த்தனங்கள் அல்லவா? தியாகராஜர், தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகிய ஸங்கீத மும்மூர்த்திகள் திருவாரூரில் தோன்றிக் கீர்த்தனை பாணியில் சிறந்த சாகித்தியங்கள் இயற்றினார்கள். படிப்படியான சங்கதிகள் போட்டு, விந்யாசத்தாளக் கட்டுடன் கூடிய ஆயிரக் கணக்கான கீர்த்தனங்கள் இயற்றினார்கள். சிறந்த ராக பாவத்துடன், தெய்விக பக்தி ரஸம் ததும்பும் அருமையான கீர்த்தனங்கள் இயற்றினார்கள். அவைகள் செவிக்கு அமுதமாயும் இதயத்தைப் பரவசப்படுத்தக் கூடியதாயும் அமைந்து விளங்குகின்றன.

ஸங்கீத மும்மூர்த்திகள் வெறும் ஸங்கீத வித்வான்களும் சாகித்தியக் கர்த்தாக்களும் மட்டுமல்ல. பகவானுக்கே தங்களை அர்ப்பணம் செய்த பரம பாகவத சிரோன்மணிகள். ஆழ்வார், நாயன்மார் பரம்பரையைச் சேர்ந்த பெரியோர்கள்.

தீக்ஷிதர் பேகடாவில் பாடின "தியாகராஜாய நமஸ்தே" என்ற பாட்டையும், தேவி கமலாம்பாளை பக்தி பூர்வமாக ஆனந்த பைரவியில் "கமலாம்பா ஸம்ரக்ஷதுமாம் ஹ்ருத்கமலா நகர நிவாஸி:" என பாடின ஸங்கீதத்தையும் கேட்டு ஆனந்தமடையாத ஸங்கீத வித்வான்கள் இல்லையெனவே சொல்லலாம். தீக்ஷிதர் அவர்களின் ஜீவிய சரித்திரத்தை சென்னை ஸர்வகலாசாலை ஸம்ஸ்

...யாக்ஷர் டாக்டர். வி. ராகவன், M. A. Ph. D. அவர் ...ருவாரூர் கோயிலில் சமீபத்தில் அரங்கேற்றப்பட்டு, ஸம்ஸ் ...ல் விரைவில் வெளிவருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

...கர்நாடக சங்கீதத்துக்கு உரிய எத்தனையோ ராகங்களின் ...களை இன்று மும்மூர்த்திகளின் கீர்த்தனங்களைக் கொண்டு வகுத்து அறிய வேண்டியதாயிருக்கிறது.

அத்தகைய மகா புருஷர்கள் தோன்றிய திருவாரூரில் அவர் ஞாபகச் சின்னம் அமைக்கும் முயற்சி நடந்து வருவது ...கள் அறிந்ததே. வித்வத் சபையின் தோற்றத்துக்கே காரண புருஷர்கள் ஸங்கீத மும்மூர்த்திகள் அல்லவா? அவர்களின் ஞாபகச் சின்ன மண்டபத்தின் அஸ்திவார விழாவையும் விரைவில் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ வேண்டாமா? அதற்குச் ஸங்கீத வித்வான்களும், ஸங்கீத ரஸிகர்களும், ஸங்கீதக் கலையைக் காப்பாற்றி வரும் பெரியோர்களும், நன்றிமறவாத் தமிழ் மக்களும் உதவி புரிய வேண்டும். ஸங்கீத மும்மூர்த்திகளுக்கு விரைவில் ஞாபகச் சின்ன மண்டபம் காண வேண்டும்.

மும்மூர்த்திகள் ஞாபகச் சின்னத்துக்குப் பொருள் உதவி அனுப்பவேண்டிய விலாசம்:

ஸ்ரீ சதாசிவம், பொக்கிஷதார், மும்மூர்த்தி ஞாபகச் சின்னத் திருப்பணி, 'கல்கி' காரியலாயம், சென்னை — 10.

[திருவாரூர் ஸங்கீத மும்மூர்த்தி பிரதிஷ்டா சபாவின் பிரகடனம்].

112789